| மாகாணக்கல்வித் திணைக்களம்<br>வடக்குமாகாணம்<br>6ம் தவணைப் பரீட்சை - 2024 |
|---|

| தரம் - 13 | கிறிஸ்தவம் | 43 | I | இரண்டு மணித்தியாலம் |
|---|---|---|---|---|

பகுதி I

❖ **மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

01) பழைய ஏற்பாட்டின் சில நூல்கள் அரமயிக் மொழியில் எழுதப்பட்டமைக்கான காரணமாக அமைவது
- (1) கட்டாய மொழியாக்கப்பட்டிருந்தமை.
- (2) யூதமக்கள் அரமயிக் மொழிக்கு பழக்கப்பட்டிருந்தமை.
- (3) கிரேக்க மொழி நடைமுறையில் இல்லாதிருந்தமை.
- (4) மூல மொழியாக நடைமுறையில் இல்லாதிருந்தமை.
- (5) அசீரியாவுக்கு நாடுகடத்தப்பட்டிருந்தமை.

02) நன்மை தீமையை அறியும் மரம் எதைக் குறித்து நிற்கின்றது
- (1) விடுதலை வாழ்வை
- (2) மிதமிஞ்சிய ஆசையை
- (3) தலைக்கனமான செயலை
- (4) சுகந்திரமாக முடிவெடுக்கும் ஆற்றலை
- (5) சாகா வரத்தை

03) கோய் கடோஷ்" என்ற எபிரேயச் சொல்லின் பொருள்
- (1) செகுல்லா என்ற சொத்து
- (2) கொஹேன் என்ற குருக்கள் இனம்
- (3) வேறுபடுத்தப்பட்ட இனம்
- (4) ஒடுக்கப்பட்ட இனம்
- (5) நித்திய வாழ்விற்குரிய இனம்

04) திருக்கோவிலில் இறைவனின் பிரசன்னத்தை காட்சியினூடாக அனுபவித்தவர்
- (1) எசாயா
- (2) எரேமியா
- (3) எசேக்கியயேல்
- (4) ஒசாயா
- (5) ஆமோஸ்

05) நீதியோடும், நியாயத்தோடும் வாழ்வதற்காக இறைவனில் நம்பிக்கை வைத்து பாடப்பட்ட பாடல்
- (1) புகழ்ச்சிப்பாடல்
- (2) நன்றிப்பாடல்
- (3) அரச பாடல்
- (4) நம்பிக்கையின் பாடல்
- (5) ஞானபாடல்

06) A - யூதராக பிறந்தவர்.

B - வரிதண்டுபவராக உரோமைய அரசில் பணியாற்றியவர்.

C - யேசுவின் சீடராக அழைக்கப்பட்டவர்.

மேலே தரப்பட்ட கூற்றுக்களுக்கு பொருத்தமானவராக அமைந்தவர்
- (1) லூக்கா
- (2) பேதுரு
- (3) யோவான்
- (4) சக்கேயு
- (5) மத்தேயு

07) புனித லூக்கா தனது இரு நூல்களையும் மாண்புமிகு தியோப்பில் என்பவருக்கு அர்ப்பணித்து எழுதியுள்ளார். இங்கு "தியேர்" எனப் தன் பொருள் யாது
- (1) இறைவனின் மீட்பை பெறுபவர்.
- (2) இறைவனால் உயர்த்தப் பெறுபவர்
- (3) ஆண்டவரின் ஆற்றலைப் பெறுபவர்.
- (4) இறைவனால் அன்பு செய்யப்படுபவர்.
- (5) இறைவனால் இரக்கம் பெறுபவர்.

08) “பிற இனத்தவரின் அப்போஸ்தலர்” என்று அழைக்கப்பட்ட நபர்
(1) யோசவாஸ் அடிகள் (2) யாக்கோமே கொன்சால்வே (3) பவுல்
(4) யாக்கோபு (5) ஸ்தேவான்

09) சிரியாவில் அந்தியோக்கியக் கிறிஸ்தவ சபையிலே செபத்தில் ,ருந்த போது, உலகம் முழுவதும் மறைப்பணிக்கு அனுப்பி வைப்பதற்கு தூய ஆவியின் வழிகாட்டல் கிடைக்கப் பெற்ற இருவர்.
(1) பவுல், யோவான்மாற்கு (2) பவுல், பர்ணபா
(3) சீலா, திமொத்தேயு (4) பர்ணபா, லூக்கா
(5) லூக்கா, பவுல்

10) எருசலேம் பொதுச்சங்கம் கூட்டப்பட்டகாலம்
(1) கி.பி 49 (2) கி.பி 50 (3) கி.பி 52 (4) கி.பி 60 (5) கி.பி 53

11) ஆண்டவராகிய மெசியாவின் வழியை ஆயத்தம் செய்வதே பணியாக கொண்டவர்
(1) திருமுழுக்கு யோவான் (2) மோசே (3) பேதுரு
(4) யோவான் (5) யாக்கோபு

12) மிகவும் தனிப்பட்ட முறையில் எழுதப்படடிருக்கும் கடிதமாக அமைவது
(1) உரோமையர் (2) 1 கொரிந்தியர் (3) பிலமோன்
(4) எபேசியர் (5) கொலோசையர்

13) திருமணம், குடும்பம், வாழ்கைப் போராட்டம் பற்றிய ஆழமான படிப்பினைகளைக் கொண்ட திருமுகம்
(1) உரோமையர் (2) எபிரேயர் (3) பிலமோன் (4) எபேசியர் (5) யூதா

14) இறைவனின் மிக உன்னத மறைபொருள் மறைந்திருந்தது
(1) படைப்பில் (2) மனிதனில் (3) ஆதிப்பெற்றோரில்
(4) திருப்பலியில் (5) கிறிஸ்துவில்

15) யூத மக்கள் எதிர்பார்த்திருந்த மீட்பர் இயேசுவே, என்பதை எடுத்துக்காட்டுவதை நோக்கமாக கொண்டிருந்த நற்செய்தியாளர்.
(1) புனித மாற்கு (2) புனித மத்தேயு (3) புனித லூக்கா
(4) புனித யோவான் (5) புனித ஸ்தேவான்

16) முழு உலகிற்கும் இறையாட்சியை வெளிப்படுத்திய ஓர் ஆசிரியராக அறிமுகப்படுத்தப்பட்டவர்
(1) புனித பவுல் (2) புனித திருமுழுக்கு யோவான் (3) புனித பேதுரு
(4) இயேசு (5) புனித யோன் மாற்கு

17) ஒவ்வொவரும் தமது சிலுவையைத் தாமே சுமந்து கொண்டு செல்வதே ________________ ஆகும்.
(1) மூதாதையரின் படிப்பினை (2) மோசேயின் சட்டம் (3) உண்மையான வாழ்க்கை
(4) இறையியல் சிந்தனை (5) மறையுரையின் படிப்பினை

18) விண்ணரசில் உள்ள உன்னத மதிப்பை எடுத்துக்காட்டும் உவமைகளாக அமைவன
(1) வலை, முத்து (2) கடுகுவிதை, வலை (3) புளிப்புமாவு, வலை
(4) புதையல், முத்து (5) களைகள், கடுகு விதை

19) புதிய ஏற்பாட்டுக் காலத்தில் பாவனையிருந்து மிகப் பெறுமதிமிக்க நாணயம்
(1) தெனாரியம் (2) தாலந்து (3) வெள்ளி (4) மினா (5) பவுண்ஸ்

20) ஒருவருடை நிலைவாழ்வின் விதியினைத் தீர்மானிப்பது
(1) ஆன்ம, சரீர இரக்கச் செயல்கள் (2) திருச்சபை சட்டங்கள்
(3) ஒப்பரவு அருளடையாளம் (4) உடலைச் சார்ந்த இரக்கச் செயல்கள்
(5) நற்கருணை வழிபாடு

21) இயேசு செய்த அரும் செயல்களுள் "குணமளித்தல்" என்பதற்கு உதாரணமாக அமைவது
(1) பேய் பிடித்தவரை நலமாக்குதல். (2) கடல் மீது நடத்தல்
(3) இலாசர் உயிர் பெறல் (4) காற்றையும் கடலையும் அடக்குதல்
(5) பேதுருவின் மாமியார் நலமடைதல்

22) விலகிப் போங்கள் சிறுமி இறக்கவில்லை உறங்குகின்றார்" இவ் வார்த்தையை இயேசு கூறிய இடம்
(1) மாத்தா மரியா வீட்டில் (2) சீமோன் வீட்டில்
(3) சக்கேயுவின் வீட்டில் (4) தொழுகைக் கூடத் தலைவர் யாயீரின் வீட்டில்
(5) கப்பர் நாகூம் தொழுகைக் கூடத்தில்

23) இயேசுவின் தாழ்ச்சியின் காரணமாக அவருக்கு கிடைத்த புதுப் பெயராக அமைந்தது
(1) "யேசு மீட்டருளும்" (2) "விண்ணகத் தந்தையே"
(3) "இயேசுவே ஆண்டவர்" (4) "என் ஆண்டவரே என் தேவனே"
(5) "நீர் மெசியா வாழும் கடவுள்"

24) புனித பவுல் 1 கொரிந்தியர் 13 : 1 - 13 இல் மிக ஆணித்தரமாக கொரிந்திய சபைக்கு சுட்டிக்காட்டுவது
(1) கீழ்ப்படிவு (2) அன்பு (3) குடும்ப வாழ்வில் நல்லுறவு
(4) தாழ்ச்சியும் மகிமையும் (5) பகிர்வு

25) சீடர்களின் நம்பிக்கையை உறுதிசெய்வதற்கு காரணமாக இருந்த நிகழ்வாக காணப்படுவது
(1) காற்றையும் கடலையும் அடக்கியது
(2) பேதுருவை திருச்சபைத் தலைவராக நியமதித்தது
(3) இறந்தவர்களை உயிர்ப்பித்தது
(4) மலைப்பொழிவு
(5) இறுதி இராசாப்போசனம்

26) என் அன்பார்ந்த மகன் நீயே உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்" இக் கூற்று இயேசுவுடன் தொடர்புடை நிகழ்வு
(1) மலைப்பொழிவு (2) தோற்றம்மாறுதல் (3) திருமுழுக்கு
(4) சிலுவை வார்த்தை (5) சீடரின் அழைப்பு

27) பாலைவனத்தில் இயேசுவிற்கு ஏற்பட்ட சோதனைகளில் முதலாம் சோதனையில் எதிர் கொண்ட சவால்
(1) புகழ் (2) வல்லமை (3) செல்வம் (4) அதிகாரம் (5) பெருமை

28) தலைவன் பணியாளராக வேண்டும் என்பது இயேசுவின் முக்கிய படிப்பினையாக அமைநத நிகழ்வு
(1) கெத்சமனே விண்ணப்பம் (2) இறுதி இராவுணவு
(3) தலைமைச்சங்க விசாரணை (4) திருமுழுக்கு
(5) நாசரேத்துப் போதனை

29) இயேசு வாழ்வு தரும் தண்ணீர் பற்றிக் கூறியது.
(1) சமாரியப்பெண் (2) நிக்கதேமு (3) பேரு (4) தோமா (5) சகேயு

கீழ்வரும் கூற்றுக்களைக் கருத்தில் கொள்க.

A - கடவுள் அவரை உயிர்த்தெழச்செய்தார் அதற்கு நாங்கள் சாட்சிகள்

B - கிறிஸ்தவே உலக மக்கள் எதிர்பார்த்த மெசியா

C - மூவாயிரம் பேர் திருமுழுக்குப் பெற்றனர்.

D - ஐயாயிரம் பேர் திருமுழுக்குப் பெற்றனர்.

E - யோவேல் இறைவாக்கினரின் இறைவாக்கு நிறைவேறியது.

30) மேற்குறித்தவற்றுள் பெந்தகோஸ்து நாள் பற்றிய சரியான கூற்று

(1) A,B,C (2) B,C,D (3) A,C,E (4) B,C,E (5) A,D,E

❖ கீழ்வரும் அட்டவணையில் A முதல் H வரை தரப்பட்டுள்ள உரோம கலாபனை தொடர்பான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 31 ஆம் 32 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

| | | | |
|---|---|---|---|
| A | புனித பவுல்சிரச்சேதம் செய்யப்பட்டார் | B | யோவான் பத்மு தீவிற்கு நாடுகடத்தப்பட்டார். |
| C | பேரரசனைகடவுள் என வணங்கும் படி கட்டளை இடப்பட்டது. | D | இயற்கை அனர்த்தங்களுக்கு கிறிஸ்தவர்களே பொறுப்புகூற வேண்டும். |
| E | புனித பொலிகாப் மறைசாட்சி மரணம் | F | குருக்கள் ஆயர்கள் துன்புறுத்தப்படுதல். |
| G | காட்டு விலங்குகளுக்கு இரையாதல் | H | புனித இக்கேசியஸ் மறைசாட்சி மரணம் |

31) மேற்குறித்தவற்றுள் பேரரசர் தொமிசியனுடன் தொடர்புடைய சோடிகளாவன

(1) A,D (2) B,E (3) E,F (4) G,H (5) B,C

32) மேற்குறித்தவற்றுள் பேரரசர் மாற்குஸ் அவுரேலியனுடன் தொடர்புடைய சோடிகளாவன

(1) B,C (2) C,F (3) E,F (4) G,H (5) D,E

33) மரண வேளையிலும் தன் மீது கல் எறிந்தவர்களுக்கு மன்னிப்பு வழங்கியவர்

(1) பிலிப்பு (2) பேதுரு (3) பவுல் (4) யோவான் (5) ஸ்தேவான்

34) விருத்த சேதனப் பிரச்சினைக்கு தீர்வுகாண கூடிய சங்கம்

(1) நிசேயா (2) எபேசு (3) எருசலேம் (4) திரிதெந்து (5) கல்சடோன்

35) பேதகங்களுக்குப் பதில் அளித்தலின் வழியாக தூய கிறிஸ்தவ மறையைப் பாதுகாத்தவர்கள்

(1) திருச்சபைத் தந்தைகள் (2) அப்போஸ்தலிக்கத்தந்தையர்கள்
(3) திருத்தூதர்கள் (4) பிதாப்பிதாக்கள்
(5) திருத்தந்தையர்கள்

36) மனிதனின் சொந்த தாய் நாட்டை எந்தப்பகைவர்களாலும் முற்றுகை இட முடியாது என்பதனை எடுத்துக்காட்டி இறைவனின் நகரம் எனும் நூலை எழுதியவர்

(1) புனித அகுஸ்தினார் (2) புனித ஜஸ்டின் (3) புனித அத்தனாசியார்
(4) புனித ஜெரோம் (5) புனித சிறிஸ்

37) ஐந்தாம் நூற்றாண்டில் தேவதாய்க்கும், புனிதர்களுக்கும் புனித பண்டங்களுக்கும் வணக்கமும் பக்தியும் கொடுத்த கத்தோலிக்கதிருச்சபை

1) மேற்கு (2) கிழக்கு (3) சீரோ மலபார்
(4) சீரோமலங்கரா (5) வடக்கு

38) திருமறை அறிவிப்புத் துறவறசபை என அழைக்கப்பட்ட துறவற சபை

(1) கார்மேல் (2) டொமினிக்கன் (3) பிரான்சிஸ்கன்
(4) வல்தேசியன் (5) பெனடிக்ற்

39) 1865இல் வில்லியம் பூத் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட சீர்திருத்தசபை

(1) இங்கிலாந்துசபை (2) மெதடிஸ் (3) இரட்சணிய சேனை
(4) பப்ரிஸ்ற் (5) அமெரிக்கன்மிசன்

40) கரையோரப் பிரதேசங்களில் சிறிய தேவாலயங்களைக் கட்டி இந் நாட்டிலுள்ள போர்க்கேயருகும் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவிய உள் நாட்டவர்களுக்கும் சேவை செய்தவர்கள்

(1) இயேசுசபை (2) அகுஸ்தினார்சபை (3) பிரான்சிஸ்கன் சபை
(4) டொமினிக்கன் சபை (5) டிலாசால்சபை

பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 41 - 45 வரையான வினாக்களுக்கு விடை தருக.

A. திருக்குடும்ப கன்னியர் சபை
B. டிலாசால்சபை
C. நல்லாயன் கன்னியர் சபை
D. பிரான்சிஸ்கன் கன்னியர் சபை
E. ஏழைகளின் சிறிய சகோதரர் சபை
F. அப்போஸ்தலிக்க கார்மேல்சபை

41) இலங்கைக்கு வந்த முதலாவது துறவற கன்னியர்களின் சபை

(1) B (2) C (3) D (4) A (5) E

42) வறிய பிள்ளைகளுக்கு இலவசக் கல்வியை மேற்கொண்டு புதிய கற்றல் செயற்பாடுகளை அறிமுகப்படுத்திய சபையினர்

(1) A (2) C (3) D (4) E (5) B

43) இவர்களின் முக்கியமான தூதுப்பணி கைவிடப்பட்ட வயோதிபர்களைப் பராமரித்தல் ஆகும்.

(1) B (2) D (3) E (4) C (5) F

44) கல்வியை முதன்மைத் தூதுப்பணியாகக் கொண்டு தங்குமிட வசதியுடன் சிறுவர் விடுதலைகளை ஆரம்பித்து நடத்திய சபையினர்

(1) A (2) B (3) C (4) F (5) E

45) கி.பி 1916,ல் ஹெந்தலையில் குஸ்ரரோக வைத்தியசாலையை ஆரம்பித்த சபையினர்.

(1) C (2) D (3) E (4) A (5) F

46) இயேசுவை சந்தித்ததன் ஊடாக தம் வாழ்வை மாற்றியமைத்துக் கொண்டதுடன் ஒரு மறைத்தூதுவராகவும் மாறியவர்

(1) சமாரியப் பெண் (2) கூனிப்பெண் (3) கைம்பெண்
(4) இரத்தப்போக்குடையபெண் (5) மாரத்தாள்

47) மனிதத்துவத்திற்காக நேரம், உழைப்பு, பணம், இனம், மதம் ஏற்றத்தாழ்வு என்பன தடையாக அமையக் கூடாது என்பதை விளக்குகின்ற இயேசு உவமை

(1) நல்ல சமாரியன் (2) இலாசரும் செல்வரும் (3) மனந்திருந்திய மகன்
(4) வலை (5) அத்திமரம்

48) இறைசாயலாகப் படைக்கப்பட்ட மனிதன் சூழலின் ________________ வழிகாட்டடியாகவும் இருக்கிறான்.

(1) உரிமையாளனாகவும் (2) தலைவனாகவும் (3) பொறுப்பாளனாகவும்
(4) படைப்பாளியாகவும் (5) பயன்பாட்டாளனாகவும்

49) மனிதன் இயற்கையாகவே சமூகத்தன்மை உள்ளவனாகையால் அயலாருடன் இணைந்து செயற்படுவது முக்கியம் என்பதை விளக்க திருத்தந்தை 23 ஆம் அருள்பர் எழுதிய சுற்றுமடல்

(1) தொழிலாளர் சாசனம் (2) அவனியில் அமைதி (3) மனித உழைப்பு
(4) திருச்சபையின் சமூக ஈடுபாடு (5) நூறாவது ஆண்டு

50) சர்வதேச சபைகளின் சம்மேளனம் குறுகிய பெயரினால் எவ்வாறு குறிப்பிடப்படுகின்றது.

(1) W.C.C (2) E.E.M (3) Y.M.C.A (4) ARCIC (5) YWCA

| | | |
|---|---|---|
| | **மாகாணக்கல்வித் திணைக்களம்**<br>**வடக்குமாகாணம்**<br>**6ம் தவணைப் பரீட்சை - 2024** | |

| | | | | |
|---|---|---|---|---|
| **தரம் - 13** | **கிறிஸ்தவம்** | **43** | **II** | **மூன்று மணித்தியாலம்** |

❖ பகுதி I இலிருந்து இரு வினாக்களையும் பகுதி II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி I

*01)*

(i) எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர் இருவரின் பெயரைத் தருக. *(2 புள்ளிகள்)*

(ii) இறைவாக்கினரின் பிரதான படிப்பினைகள் இரண்டினைத் தருக. *(4 புள்ளிகள்)*

(iii) இறைவாக்கினர் நாத்தான் மெசியா பற்றி தாவீது அரசனுக்கு முன்வைத்த கருத்துக்கள் மூன்று தருக. *(6 புள்ளிகள்)*

(iv) இறைவாக்கினரிடம் காணப்பட்ட சிறப்பான பண்புகள் இன்றைய தலைவர்களுக்கு எடுத்துக் காட்டாய் அமைகின்றது நான்கு பண்புகளைத் தந்து விளக்குக. *(8 புள்ளிகள்)*

*02)*

(i) பலஸ்தீனாவில் வாழ்ந்த யூத சமய குழுவினரில் இரு குழுவினரை தருக. *(2 புள்ளிகள்)*

(ii) யூத மக்கள் வரிதண்டுபவர்களை இனத்துரோகிகளாக கருதியதற்கு காரணங்கள் இரண்டு தருக. *(4 புள்ளிகள்)*

(iii) யூத சமய சடங்குகளில் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் மூன்றைக் குறிப்பிடுக. *(6 புள்ளிகள்)*

(iv) கிறிஸ்தவ மாணவனாகிய நீர் இன்று மனித மாண்பை பேண உம்மால் மேற்கொள்ளக் கூடிய செயற்பாடுகள் நான்கை குறிப்பிட்டு விளக்குக. *(8 புள்ளிகள்)*

*03)*

(i) சமூகப்பணிகளிலும், மறைபோதகப் பணிகளிலும் ஈடுபட்ட திருத்தொண்டர்கள் இருவரின் பெயரைத் தருக. *(2 புள்ளிகள்)*

(ii) தூய ஆவியின் வருகையின் போது இடம்பெற்ற நிகழ்வுகளுள் இரண்டைக் குறிப்பிடுக. *(4 புள்ளிகள்)*

(iii) ஆரம்ப காலத்திருச்சபையின் பண்புகள் மூன்றைக் குறிப்பிடுக. *(6 புள்ளிகள்)*

(iv) ஆரம்பகால கிறிஸ்தவ சபையின் நலன்புரி செயற்பாடுகள் வாழ்க்கை முன்மாதிரி மூலம் இன்று நாம் கற்றுக் கொள்ளும் விடயங்கள் நான்கினைத் தந்து விளக்குக. *(8 புள்ளிகள்)*

## பகுதி II

*04)*

(i) சமநோக்கு நற்செய்தி தொடர்பாக எழுந்த பிரச்சனைக்கு முன்வைத்த கருத்துதுக்களைத் தந்து விளக்குக. *(10 புள்ளிகள்)*

(ii) தளர்வுற்ற நிலையில் காணப்படும் எமது சமய வாழ்வினை மீட்டெடுக்க திருச்சபையாகவும் பொது நிலையினராகவும் இருந்து செயற்படுத்தக் கூடிய விடயங்கள் ஐந்தினை விளக்குக. *(10 புள்ளிகள்)*

05)

(i) கி.பி 64 - 68 காலப்பகுதியில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான துன்பங்களுக்கு காரணமானவரை குறிப்பிட்டு, அவரினால் மேற்கொள்ளப்பட்ட துன்புறுத்தல்களை தந்து விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) கலாபனைக் காலத்தில் கிறிஸ்தவர்களிடம் வெளிப்படுத்தப்பட்ட பண்புகள் இன்றைய உலகிற்கு வெளிப்படுத்தும் செய்தியினை ஐந்து எடுத்துக்காட்டினூடாக விளக்குக. (10 புள்ளிகள்)

06)

(i) யோசவால் அடிகளாரின் மறைத்தூதுக் கொள்கையையும் மறைத்தூதுப் பணியையும் விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) ஒல்லாந்தரின் கல்வி நிர்வாக செயற்பாடுகள் இலங்கையின் அபிவிருத்தி செயற்பாடுகள் இலங்கையின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு உறுதுணையாக அமைந்தன. ஐந்து விடயங்களை முன்வைத்து விளக்குக. (10 புள்ளிகள்)

07)

(i) நிசேயே பொதுச்சங்கம் கூட்டப்பட்டதற்கான பின்னணியையும் அச்சங்கத்தினால் முன்வைக்கப்பட்ட தீர்மானங்களையும் விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) திருச்சபையின் மறை உண்மையினுள் வாழ்வதற்கு எமது வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய வழி முறைகள் ஐந்தினை தந்து விளக்குக. (10 புள்ளிகள்)

08)

(i) மானிட அபிவிருத்தி தொடர்பாக திருவிவிலிய எடுத்துக் காட்டுகளுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) பல்லின சமய மக்கள் மத்தியில் நாட்டின் முழுமையான அபிவிருத்திக்கு எவ்வாறான ஒத்துமைப்பு வழங்குவீர் என்பதை ஐந்து விடயங்களினூடாக விளக்குக. (10 புள்ளிகள்)